# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.796/2019 | Age :44 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW9/ PW-7 | |
| Name : செங்குட்டுவன், உதவி ஆய்வாளர் | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 23.07.2025.**

**1ம் எதிரி இறந்துவிட்டார். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பாபநாசம் உட்கோட்டத்தில் சிறப்பு நுண் அறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 03.10.2017 ம் தேதி திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பணியில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அசா2 ரவிச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் ஆஜராகி 11மணியளவில் திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண். 246/2017 ல் சட்டபிரிவுகள் 294(பி), 324, 506(2) இ.த.ச-வின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை**

**அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் காலை 11.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மகேஷ் மற்றும் ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் சாந்தி, தனபால், மூர்த்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் சாட்சி சீதாலெட்சுமி என்பவரை கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 03.10.2017 ம் தேதி 15.30 மணியளவில் கோவிந்தரபும் விட்டல் கோவில் பேருந்து நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்த எதிரிகள் நவீன் மற்றும் மகாதேவன் ஆகியோர்களை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கின் 1வது எதிரி மாரிமுத்து முன்பிணை பெற்றதால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. பின்னர் எனக்கு பணி மாறுதல் ஆகிவிட்டதால் வழக்கின் கோப்பினை உதவி ஆய்வாளர் பிரபாகரன் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னிடம் விவரம் கேட்டறிந்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் 02.10.2017 என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கை 03.10.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒருநாள்

காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் காயம்பட்ட நபர் சிகிச்சையில் இருந்ததால் மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பெற்று வந்து பதிவு செய்ததால் தாமதம் ஏற்பட்டது. மேற்படி விவரத்தை நான் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அசா2ன் வீட்டிலிருந்து மருத்துவமனை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 கி.மீ. தொலைவு இருக்கும். அன்று இரவே அசா 2 மருத்துவமனைக்கு சென்றுவிட்டாரா என்றால் எனக்கு காய தகவல் வந்த பிறகே நான் மருத்துவமனைக்கு சென்றதால் தெரியவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. வேறு போலிசார் சென்று பார்த்தார்கள். அப்போது அங்கிருந்தவர்களை விசாரணை செய்தோமா என்றால் இரவில் யாரும் இல்லாததால் யாரையும் விசாரிக்கவில்லை. பின்னர்தான் எனக்கு காய தகவல் கிடைத்தது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் இடையே உரிமையியல் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அது தொடர்பான ஆவணங்களை விசாரணையின்போது கைப்பற்றினேனா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வீடுகளில் உள்ள ராஜேந்திரன, கண்ணன், சுந்தரமூர்த்தி, மோகன் மற்றும் சேகர் ஆகியோர்களை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள அனைவரும் புகார்தாரரின் உறவினர் என்றால் சரிதான். மூர்த்தி என்கிற தனிநபர் சாட்சியத்தையும் விசாரணை செய்துள்ளேன். மூர்த்தி சம்பவ இட சாட்சியாக இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.2 னிடமிருந்து புகார் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக

காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை.**</u> இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**